## உச்சநீதிமன்ற உத்தரவு உள்ளதால்

# காவிரி விவகாரத்தில் கர்நாடகாவிடம் நாம் கெஞ்சத் தேவையில்லை!

## தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் பேட்டி!

**வேலூர், ஜூலை 29-**

**சுப்ரீம் கோர்ட் ஆர்டர் உள்ளதால் காவிரி விவகாரத்தில் கர்நாடகாவிடம் நாம் கெஞ்ச தேவையில்லை என காட்பாடியில் தி.மு.கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் கூறினார்.**

காட்பாடி காந்தி நகரில் தி.மு.க., பொதுச்செயலாளரும், முன்னாள் நீர் வளத்துறை அமைச்சருமான துரை முருகன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதிலும் வருமாறு;

**கேள்வி:** காவிரி விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் கர்நாடகா சென்று அந்த மாநில முதல்வரிடம் பேச்சுவார்த்தை நடத்த இருப்பது குறித்து?.

**துரைமுருகன்:** காவிரியில் இரண்டு பிரச்சினை உள்ளது. ஒன்று மாதாந்திர வாரியாக நமக்கு கொடுக்க வேண்டிய தண்ணீரை கொடுக்கவில்லை. அதைக் கேட்கப் போகிறாரா அல்லது மேகதாது கட்ட வேணாம்னு பேச போறாரான்னு தெரியல. தண்ணீர் எங்களுக்கு பத்தவில்லை எனக்கேட்டால் சுப்ரீம் கோர்ட்டின் ஆர்டர் வீணாக போய்விடும்.

அதனால்தான் எங்க ஆட்சி காலத்தில கூட யாரும் போனதில்லை. ஏனென்றால் நமக்கு சுப்ரீம் கோர்ட் உரிமை கொடுத்து விட்டது. இவர்களிடம் போய் கெஞ்ச தேவை இல்லை. முதலமைச்சர் பெங்களூர் செல்வதற்கு முன்பு, எங்களை கூப்பிடா விட்டாலும் பரவாயில்லை. சட்டமன்றத்தில் உள்ள எதிர்கட்சிகளை யாவது கூட்டி ஒரு ஆலோசனை செய்திருக்கலாம். அல்லது அனைத்து கட்சிகளையும் கூட்டி ஆலோசனை செய்திருக்கலாம். அதையும் செய்யவில்லை.

**மேகதாது கட்டினால் ஒரு சொட்டு தண்ணீர் கூட கிடைக்காது!**

மேகதாதுவை பொறுத்தவரை



கபினி, கே.ஆர்.சாகர் தண்ணீரை 3 அணைகள் கட்டி நிறுத்தி விட்டார்கள்.

மேகதாதுவில் அணை கட்டினால் ஒரு சொட்டு தண்ணீர் கூட தமிழகத்திற்கு வராது. ஆகவே இது ஒரு நாள், அரை நாள் பிரச்சனை அல்ல 1992ம் ஆண்டில் இருந்து இருக்கின்ற பிரச்சினை.

முன்னாள் ஆட்சியில் இருந்தவர்கள் செய்த குளறுபடியால் தான் இப்படி ஆகிவிட்டதாக அமைச்சர் ஒருவர் சொல்கிறார். நான் சட்டசபையில் இருக்கும் போது கையெடுத்து கும்பிட்டு கேட்டேன். கர்நாடகாவில் யாராவது முன்னாள் அமைச்சர்கள் சரியாக செய்யவில்லை, முன்னாள் முதல்வர்கள் சரியாக செய்யவில்லை என சொல்கிறார்களா என்றால் கிடையாது. அவர்களுடைய ஒரே நோக்கம் மேகதாது தான். அதுபோல ஆயிரம் பிரச்சனை இருந்தாலும் நீங்களா? நானா? என பேசுவதை விட காரியம் ஆக வேண்டும். அமைச்சர்கள் அடக்கி வாசிக்க வேண்டும்.

முதலமைச்சர் போய் வந்த பிறகு தான் இது பற்றி என்ன பேசினார். என்ன ஆகும் என தெரியும்.

**கேள்வி:** முதலமைச்சராக இருந்த போது எம்.ஜி.ஆர் போனது போல முதல்வர் விஜய்யும் கர்நாடக போய் பேசுகிறாரா?.

**துரைமுருகன்:** எம்.ஜி.ஆர் போனது நாம் கோர்ட்டுக்கு போகாதபோது. அப்போது நம்மிடம் நீதிமன்ற உத்தரவு இல்லை. இப்போது நம்மிடம் கோர்ட் தீர்ப்பு உள்ளது. ஆகையால் அதோடு இது பொருந்தாது.

**கேள்வி:** தற்போதைய அரசும் கடன் வாங்கி இருப்பது குறித்து?.

**துரைமுருகன்:** எந்த ஆட்சியாக இருந்தாலும் கடன் வாங்காமல் ஆட்சி நடத்த முடியாது. ஆனால் வாங்கிய கடனை என்ன செய்கிறார்கள் என்பது தான் முக்கியம்.

**கிளர்ச்சி எழுந்தால் ஆட்சி மாற்றம் நடக்கும்!**

**கேள்வி:** மத்திய அரசுக்கு எதிராக டெல்லியில் மாணவர்கள், இளைஞர்கள் நடத்திய போராட்டம் வெற்றி பெற்றது குறித்து?.

**துரைமுருகன்:** எங்கேயுமே மாணவர்கள் கிளர்ந்து எழுந்தால் ஆட்சி மாற்றம் தான் நடக்கும். வங்கதேசம் போன்ற நாடுகளிலும் அது நடந்துள்ளது. இதே போன்றுதான் 1965ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தை நாங்கள் நடத்தினோம். ஒரு ஆட்சி மாற்றத்தையே ஏற்படுத்தவில்லையா?. மாணவர் சமுதாயம் என்பது லேசானது அல்ல. வெளியே இருக்கும் வரை தனியாக இருப்பான். ஆனால் ஒன்றாக சேர்ந்து விட்டால் அவனது சரித்திரம் பெரிதாகிவிடும்.

**கேள்வி:** டெல்லியில் போராடிய இளைஞர்களின் தாக்கம் 2029 நாடாளுமன்ற தேர்தலில் எதிரொலிக்குமா?.

**துரைமுருகன்:** நான் ஜோசியன் அல்ல.

**கேள்வி:** பா.ஜ.க.வுடன் தி.மு.க., நெருங்குவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவது குறித்து?.

**துரைமுருகன்:** பாரதிய ஜனதா கட்சியிடம் நாங்கள் நெருங்கவில்லை. காங்கிரஸ் கூட்டணியில் இருந்து நாங்கள் வெளியே வந்து விட்டோம்.

**கேள்வி:** காவிரி விவகாரம் தொடர்பாக எழுப்பப்படும் கேள்விகளுக்கு தற்போதைய நீர்வளத்துறை அமைச்சர் பதில் அளிப்பதில்லையே?.

**துரைமுருகன்:** முதல்வரே வாயை திறப்பதில்லை. பின்னர் எப்படி அமைச்சர்கள் பேசுவார்கள்.

இவ்வாறு கழக பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

---

## விவசாயிகளை வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து

# தஞ்சையில் நாளை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெறுகிறது!

தஞ்சை, ஜூலை 29-

தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை சந்திரசேகரன், தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் தஞ்சை தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.பழனிவேல் ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விவசாயக் கடன் முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டியும் மேகதாது அணை கட்டுவதை தடுக்கத் தவறிய த.வெ.க. அரசை கண்டித்தும் டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டியும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை (30.7.2026 - வியாழக்கிழமை) காலை 10 மணி அளவில் தஞ்சாவூர் பனகல் கட்டிடம், ஜூபிடர் தியேட்டர் அருகில் நடைபெறுகிறது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கழக முதன்மைச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான கே.என்.நேரு தலைமை வகிக்கிறார்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி., முன்னாள் அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் எம்.எல்.ஏ., எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ., அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி.செழியன் எம்.எல்.ஏ., டி.ஆர்.பி.ராஜா ஆர்.வைத்தியலிங்கம் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.பி. செ.ராமலிங்கம், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.எஸ்.சிவசங்கர் எம்.எல்.ஏ., சிவ வீ.மெய்ய நாதன் எம்.எல்.ஏ., சி.வி.கணேசன் எம்.எல்ஏ., கழக விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், கழக விவசாயத் தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா, கழக விவசாயத்



தொழிலாளர் அணி தலைவர் உ.மதிவாணன், எஸ்.ஜித்து, ச.முரசொலி எம்.பி., கே.என்.அருண் நேரு எம்.பி. ஆகியோர் கண்டன உரை நிகழ்த்துகின்றனர்.

மேலும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பூண்டி கே.கலைவாணன், காடுவெட்டி ந.தியாகராஜன், க.வைரமணி, நிவேதா எம்.முருகன், என்.கௌதமன், எஸ்.செல்லபாண்டியன், கா.அண்ணாதுரை, என்.அசோக்குமார், ஏனாதி ப.பாலசுப்பிரமணியன், எம்.ரெங்கசாமி, து.செல்வம், எம்.இராமச்சந்திரன், டி.கே.ஜி.நீலமேகம், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, சி.இறைவன், த.காரல்மார்க்ஸ், குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, சண்.இராமநாதன், அஞ்சுகம்பூபதி, சு.ப.தமிழாகன், ஆடுதுறை மு.உத்திராபதி, இராம.விஜயன், பழஞ்சூர் கே.செல்வம், வீ.ஜெய பிரகாஷ், கார்த்திகேயன் வேலுச்சாமி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று கண்டன முழக்கமிடுகின்றனர்.

எனவே இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழக நிர்வாகிகள், தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன், மாவட்டப் பொறுப்பாளர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், டி.பழனிவேல் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

---

## ‘நீட்’ தேர்வை ரத்து செய்யக் கோரி கரூரில் ஆர்ப்பாட்டம்!

*கரூர், ஜூலை 29-*

*நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி தோழமை இயக்கங்கள் சார்பில் கரூரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*கரூர் மாவட்ட தோழமை இயக்க கூட்டமைப்பு சார்பில் நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி கரூர் வட்டார போக்குவரத்து அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*புதுடெல்லியில் போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியதை கண்டித்தும், மருத்துவப் படிப்பிற்கான நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தியும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.*

*மேலும் நீட் தேர்வு விவகாரத்தில் போராட்டம் நடத்திய இளைஞர்கள் மீது த.வெ.க அரசின் போலீசார் நடத்திய அத்துமீறல்களுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. சாமானிய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் சண்முகம் தமிழ் புலிகள் மாவட்ட செயலாளர் பொன்னுசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

---

## ‘நீட்’ தேர்வில் மறுபடியும் குளறுபடி!

*பெங்களூரு, ஜூலை 29-*

*கர்நாடக மாநிலம் ஆவேரி மாவட்டத்தைச் சேர்ந்த பிந்துஸ்ரீ என்ற மாணவி, தனது நீட் மறு தேர்வு முடிவுகளில் கடும் கோளாறுகள் நடைபெற்றுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார். மே 3 அன்று நடந்த முதல் தேர்வின் அதிகாரப்பூர்வ விடைக்குறிப்புகளுடன் ஒப்பிடும்போது, ஜூன் 21 மறுதேர்வில் தனக்குக் கிடைத்துள்ள மதிப்பெண்கள் மிகக் குறைவாக இருப்பதாகவும், இதில் முறைகேடு நடந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*நீட் மறுதேர்வில் மாணவி தனக்கு 668 மதிப்பெண்கள் கிடைத்திருக்க வேண்டும் என்றும், ஆனால், தேசியத் தேர்வு முகமை வெளியிட்ட முடிவுகளின் படி தனக்கு 11 மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அது போலியானது என அவர் கூறினார். ஓ.எம்.ஆர். நகலில், தனது பதிவு எண் மட்டுமே சரியாக இருந்ததாகவும், ஆனால், அதில் உள்ள கையெழுத்து மற்றும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அளிக்கப்பட்ட பதில்கள் அனைத்தும் முற்றிலும் வேறு ஒருவருடையது என்றும் மாணவி பிந்துஸ்ரீ குற்றம்சாட்டி உள்ளார்.*

---

## த.வெ.க. பாசிச கோமாளிக் கூட்டத்திற்கு

# எங்கள் தலைவர்களைப் பற்றிப் பேச தகுதியோ அருகதையோ இல்லை!

## அமைச்சர் நிர்மல்குமாரின் தரம் தாழ்ந்த பேச்சுக்கு – கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி பதிலடி!

**சென்னை, ஜூலை 29-**

**அமைச்சர் நிர்மல் குமாரின் தரம் தாழ்ந்த பேச்சிற்கு கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி பதிலடி கொடுத்துள்ளார். வதந்தி பரப்புவதும், கட்சி மாறுவதும் தான் அமைச்சர் நிர்மல் குமாரின் தகுதி என்றும் - த.வெ.க. பாசிச கோமாளிக் கூட்டத்திற்கு எங்கள் தலைவர்களைப் பற்றி பேசத் தகுதியோ அருகதையோ இல்லை என்றும் அவர், தனது பேட்டியில் குறிப்பிட்டார்.**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

அமைச்சர் நிர்மல் குமார் எங்களுடைய தலைவர்கள் குறித்து வாய்க்கு வந்ததை எல்லாம் தரந்தாழ்ந்து பேசி இருக்கிறார். தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர், இந்த அரசினுடைய அமைச்சர் என்கிற தகுதியெல்லாம் மறந்து, ஃபேக் நியூஸ் பரப்பக்கூடிய, வதந்தி பரப்பக்கூடிய அந்த நிலையிலிருந்து எங்களுடைய தலைவர்கள் குறித்து அவர் பேசியிருக்கிறார். அவருடைய தலைவர் எப்படி அநாகரிகமாக பேசுவாரோ, அதே பாணியில், அதே வகையில், அதே வளர்ப்பின் அடிப்படையில் அவர் பேசியிருக்கிறார். ஆனால் எங்கள் தலைவர்கள் எங்களை அப்படி வளர்க்கவில்லை. அதே சமயம் திமுக தலைவர்கள் குறித்து தொடர்ந்து இதுபோல அவர் பேசி வருவது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

தகுதி இருக்கா என்று எங்கள் தலைவர்கள் குறித்து கேட்டிருக்கிறார். எது தகுதி? ஒரு டெக்ஸ்டைல் கடைக்கு போனீங்கன்னா அங்க இருக்கக்கூடிய கட்சி வேட்டியெல்லாம் எண்ணீங்கன்னா, அதைவிட அதிகமான எண்ணிக்கையில் பல கட்சிகளுடைய கட்சி வேட்டியை வீட்டு அலமாரியில் வச்சிருக்கக்கூடிய சி.டி.ஆர். நிர்மல் குமாருக்கு இருப்பதுக்கு பேர்தான் தகுதியா? அவர் பரப்பின வதந்திகள் எத்தனை என ஒரு சென்செக்ஸ் எடுக்கலாம். அவர் போயிட்டு வந்த கட்சி எத்தனை அப்படிங்கிறதை கையால எண்ண முடியாது, அந்த அளவிற்கு வதந்தி பரப்புவதையும் கட்சி மாறுவதையும் மட்டுமே தொழிலாக வைத்திருக்கக்கூடிய சி.டி.ஆர். நிர்மல் குமாருக்கு இருக்கறதுக்கு பேர்தான் தகுதியா?

**ஆயிரக் கணக்கில் கரண்ட் பில்!**

அவருடைய கட்டுப்பாட்டில் இரண்டு துறை இருக்கிறது. ஒன்று மின்சாரத் துறை, இன்னொன்று சட்டத்துறை. மின்சாரத் துறையில் தினசரி மின்வெட்டு என்று தமிழ்நாடு முழுக்க போராட்டங்கள் நடக்காத நாளே இல்லை என்கிற அளவிற்கு இரவில் மக்கள் வீதியில் வந்து “எங்களுக்கு கரண்ட் கொடுங்க” என்று நடுரோட்டில் நின்று கதறிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு அம்மா, “நான் குடிசை வீட்டில் இருக்கேன், வீட்டில் பிரிட்ஜ் கிடையாது, ஏசி கிடையாது, ஒன்னும் கிடையாது, ஆயிரக்கணக்கில் கரண்ட் பில் வந்திருக்கு” என்று ஈபி ஆபீஸ் வாசலில் நின்று கதறுகிறார்.

இன்றைக்கு ஒரு அம்மா, “என்னுடைய வேலையே கம்ப்யூட்டரையும் கரண்டையும் நம்பிதான் இருக்கு. ஈபி பிரச்சனையினால என் வேலை போயிடும் போல இருக்கு, நான் கரண்டுக்காக பிச்சை எடுக்கிறேன். என்ன வேலைக்காகவும் சோத்துக்காகவும் பிச்சை எடுக்க விட்டுறாதீங்க” என்று கதறக்கூடிய காட்சி பார்க்கிறோம். தமிழ்நாடு முழுக்க மின்வெட்டால் மக்கள் அவதிப்படுகிறார்கள். மின்சாரக் கட்டணத்தின் விலை உயர்வு நெஞ்சில் கை வச்சுட்டு உட்காரும் அளவுக்கு ஷாக் அடிக்கக்கூடிய அளவிற்கு உயர்ந்திருக்கிறது. அறிவிக்கப்படாத கட்டண உயர்வாக அது இருக்கிறது. இது குறித்தெல்லாம் எந்த பதிலும் இல்லாத, எந்த அக்கறையும் இல்லாத, எந்த அறிவும் இல்லாத சி.டி.ஆர். நிர்மல் குமார் அவர்கள் எங்கள் தலைவர்களுடைய தகுதி குறித்து கேள்வி எழுப்புகிறார்.

அவருடைய இன்னொரு துறை சட்டத்துறை. அதில்



என்ன நடக்கிறது என்றால், இன்றைக்கு காலையில் எல்லாரும் பார்த்திருப்பீர்கள் - ஒரு ஆடியோ வைரல் ஆயிற்று. அரசு வழக்கறிஞர் பதவிக்கு மற்றவர்களுக்கு 15 லட்சம், உனக்கு 12 லட்சம் ரூபாய் என்று ஏதோ ஆடி ஆஃபர் கொடுப்பது மாதிரி அரசு வழக்கறிஞர் பதவியை ஆஃபரில் விற்பது போல் விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**கோமாளித்தனமான பேச்சு!**

உங்களுடைய துறையில் நடக்கக்கூடிய இவ்வளவு பெரிய ஊழல் குறித்து இதுவரைக்கும் சி.டி.ஆர். நிர்மல் குமார் வாய் திறந்திருப்பாரா? இது குறித்து கட்டுப்படுத்துவதற்கு எந்த நடவடிக்கையாவது எடுத்திருப்பாரா? இதையெல்லாம் கட்டுப்படுத்த முடியாத அவர் எங்களுடைய தலைவர்களின் தகுதி பற்றி பேசுவது எவ்வளவு நகைச்சுவை. அது ஒரு கோமாளித்தனமான பேச்சாகத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

இன்னொரு பக்கம், பாலியல் புகார் கொடுக்கப்பட்ட ஒரு பெண் தவெக எம்.எல்.ஏ “என்னை மிரட்டுகிறார்” என்று குற்றச்சாட்டு வைக்கிறார். அந்த எம்.எல்.ஏவுக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு கொடுக்கிறது இந்த அரசு. ஒரு மந்திரி ஸ்டேடியத்துக்குள் உட்கார்ந்து கொண்டு மாத்திரை நுணுக்குகிறார். அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. இன்றைக்கு ஒரு அமைச்சரின் ஆடியோ ரிலீஸ் ஆகியிருப்பதாக தகவல் வருகிறது. அதில் “கொன்னு வெளியே எடுத்துருவேன்”, “என் பார்டரை தாண்டாதே” என்றெல்லாம் டயலாக் இருக்கிறது.

இதெல்லாம் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கும் போது, ஊர் எக்கேடு கெட்டால் என்ன, என்னுடைய படை பரிவாரங்கள் எவ்வளவு அயோக்கியத்தனங்களை பண்ணினால் என்ன, எனக்கு பத்தாவது மாடியில் ஃபுல் சி வியூவோட ஆபீஸ் இருந்தால் போதும் என்று சொகுசை என்ஜாய் பண்ணக்கூடிய அந்த தன்மைக்கு பெயர் கோமாளித்தனமா இல்லையா? என்று மக்கள் கேட்கிறார்கள்.

இன்றைக்கு இந்திய நாடு முழுக்க நீட் தேர்வுக்கு எதிராக, பாஜகவுக்கு எதிராக மக்கள் போராடி வருகிறார்கள். மாணவர்கள் ரோட்டில் வந்து உட்கார்ந்திருக்கிறார்கள். மாணவர் சமுதாயம் ஒன்று திரண்டு ஒரு மந்திரியையே பதவியிலிருந்து இறக்கியிருக்கிறது. அது குறித்து வாயே திறக்காத ஒருவர் இருக்கிறார் என்றால், அவர் இந்த தமிழ்நாட்டின் முதலமைச்சர் தான்.

கோவைக்கும் மதுரைக்கும் மெட்ரோ கிடையாது என்று இரண்டாவது முறையாக ரிஜெக்ட் பண்ணியிருக்கிறார்கள். அதை எதிர்த்து இப்போது வரை முதலமைச்சர் வாயே திறக்கவில்லை. நிதியாண்டின் முதல் குவாட்டரில் போன ஆண்டை விட இந்த ஆண்டு ஒன்றிய அரசாங்கத்தின் நிதி 2,500 கோடி ரூபாய் குறைந்திருப்பதாக செய்தி வருகிறது. அதை எதிர்த்து கேள்வி கேட்பதற்கு இந்த முதலமைச்சருக்கு திராணி கிடையாது. தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாவதாகத்தான் பாடுவோம் என்று தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒரு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பப்ளிக்காக செய்தி கொடுக்கிறார். அந்த துணைவேந்தரை கண்டிப்பதற்கு வக்கு கிடையாது. முடிஞ்சா பா.ஜ.க.வைக் கண்டிக்கிறேன், பாஜகவை எதிர்க்கிறேன் என்று உங்க தலைவர் ஒரே ஒரு வார்த்தை பேசச் சொல்லுங்கள்.

தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் ஆபீஸுக்கு புகார் கொடுக்க வருபவர்கள் தீக்குளிக்க முயல்கிறார்கள். இந்த லட்சணத்தில்தான் ஆட்சி இருக்கிறது. நாகரீகம் இல்லாமல் பேசுவதை முதலில் நிறுத்தினீர்கள் என்றால் நல்லது. நிறுத்தவில்லை என்றால் திராவிட முன்னேற்றக் கழகம் அதை எப்படி எதிர்கொள்ளுமோ அப்படி எதிர் கொள்ளும்.

**களத்தில் நின்று போராடிய தி.மு.க.!**

அமைச்சர் நிர்மல் குமார் அவருக்கு அந்த கட்சியில் எந்த மதிப்பும் இல்லை, மரியாதையும் இல்லை. மதுரையைச் சேர்ந்த அமைச்சர் அவர்; ஒரு நிகழ்ச்சிக்கு போகிறார், மதுரையைச் சேர்ந்த எம்.எல்.ஏக்கள் அந்த நிகழ்ச்சிக்கு வரவில்லை என்று ஸ்டேஜை விட்டு இறங்கி ஓடுகிறார். அவ்வளவு தான் அவருக்கு அக்கட்சிக்குள் மரியாதை.

ஒட்டுமொத்த ‘Gen Z’ எங்களுக்குத்தான் ஓட்டு போட்டார்கள் என்று அவர் கிரியேட் பண்ணி வைத்திருந்த அந்த நரேட்டிவுக்கு எதிராக, ‘Gen Z’ என்ற பெயரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம் பெருமளவு இளைஞர்கள் வருகிறார்கள் என்பதை பொறுத்துக் கொள்ள முடியாமல் பேசுகிறார். நீட் எதிர்ப்பு போராட்டத்தை ‘Gen Z’ மூலம் ஹைஜாக் பண்ண அட்டெம்ப்ட் பண்றாங்க என்கிறார்கள். அந்த போராட்டத்தை திமுக, நாம் தமிழர் என அனைத்து கட்சிகளும் போய் ஆதரித்தன. உங்களை எது தடுத்தது? பாஜக கோவிச்சுக்கும் என்கிற பயம்தான் உங்களைத் தடுத்தது. மதுரையில் காலேஜ் கிளாஸ்ரூமில் உட்கார்ந்திருந்த ஒரு ஸ்டூடண்டை தடுப்புக் காவலில் வைத்தீர்கள். தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இதெல்லாம் நடந்ததே இல்லையே! நீட்டுக்காக என்ன பண்ணினோம்? ஏ.கே. ராஜன் கமிட்டி அறிக்கை கொடுத்தது தி.மு.க. அரசு.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் இரண்டு முறை தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினோம். நீதிமன்றத்தில் வழக்கு நடத்தினோம், நாடாளுமன்றத்தில் பேசினோம். கட்சி ரீதியாகவும் தமிழ்நாடு முழுக்க போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்கள் நடத்தினோம். ஆனால் தவெக என்ன செய்தது.? எல்லாம் முடிந்த பிறகு ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்த பிறகு மாணவர்களை சந்திக்க அமைச்சர் ராஜ் மோகன் செல்கிறார். பாஜக என்ற வார்த்தையை கூட உச்சரிக்க பயம். அன்று நீங்கள் வருமான வரி வழக்கை எப்படி எதிர்கொள்ளலாம் என யோசித்து கொண்டிருந்த போது நீட் தேர்விற்கு எதிராக களத்தில் நின்று போராடியது திமுக. அமைச்சர் பதவி போனாலும் பரவாயில்லை என உண்ணாவிரத போராட்டத்தில் காலந்து கொண்டவர் எங்கள் இளம் தலைவர் அவர்கள்.

நீட் தேர்விற்கு எதிராக திமுக தான் சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும், ரோட்டிலும் போராடியது. ஆனால் இவர்கள் என்ன சொல்கிறார்கள் நாளை ஒரு வாய்ப்பு வருமானால் நீட் விலக்கு பெறுவோம் என்கிறார், அப்படி என்றால் வாய்ப்பை இவர்கள் உருவாக்க வக்கில்லை. அதுவாக நடந்தால் அதன் மீது ஸ்டிக்கர் ஒட்டி கிரெடிட்டை திருடி கொள்வார்கள் அவ்வளவு தான். கல்வி அமைச்சர் ராஜ் மோகன் கூறுகிறார் கல்வியை ஒத்திசைவுப் பட்டியலுக்காகவது மாற்றுவோம் என்கிறார். ஏற்கனவே கல்வியானது ஒத்திசைவுப் பட்டியலில் தான் உள்ளது. இந்த மாதிரியான கேலிக்கூத்தை எல்லாம் செய்யும் த.வெ.க. பாசிச கோமாளிக் கூட்டத்திற்கு எங்கள் தலைவர்களைப் பற்றிப் பேச தகுதியோ அருகதையோ இல்லை.

இவ்வாறு அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது குறிப்பிட்டார்.